செய்தி வெளியீடு எண்: 986 நாள்: 09.11.2010.

# பொள்ளாச்சிக்கு அருகே மின்சாரம் தாக்கி இறந்த பள்ளி மாணவியின் பெற்றோருக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண உதவி முதலமைச்சர் கலைஞர் ஆணை !

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதிக்குட்பட்ட பொள்ளாச்சி வட்டம், ரமணமுதலிபுதூர் கிராமத்திலுள்ள மகேஷ்வரன் என்பவரின் மகள் தவமணி அவ்வூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். அம்மாணவி தவமணி, பள்ளிக்கு அருகில் இருந்த மின் வேலியின் மின்சாரம் தாக்கி 4–11–2010 அன்று உயிரிழந்தார் என்ற தகவல், வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் மூலமாகத் தமது கவனத்திற்கு வந்ததும், மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அம்மாணவியின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததுடன், மாணவி தவமணியின் பெற்றோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கிட இன்று (9–11–2010) ஆணையிட்டுள்ளார்.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9